தருவதா அல்லது வேறு இடம் தருவதா என்று யோசனையில் இருக்கிறது. இப்போது உள்ள இடம் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது. எனவே ஒரு இடம் தேடிக்கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் அக்கறை கொண்டிருக்கிறது. இதை பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

திரு. எம். எத்திராஜுலு : பர்மா மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற காரணத்தால், பர்மா அகதிகளுக்குக் கூட்டுறவு முறையில் விவசாயப் பண்ணைகளை அமைத்து விவசாயத்தில் ஈடுபடச் செய்து உற்பத்தியை பெருக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : கூட்டுறவு பண்ணை வைத்து அதன் மூலமாகப் பலன் பெறுவதற்கான விழைவோடு வருவார்களானால், அதற்குத் தக்க ஏற்பாடு செய்யலாம்.

THIRUMATHI S. MANJUBHASHINI : The Hon. Minister said that it is difficult to get them removed from that place. But we find that more new stalls come up every day on either side of the Parry's Corner where roads are used by pedestrians. Would the Hon. Minister explain to us how he proposes to prevent new stalls from coming up when the existing ones are shifted to other places ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட பொது சங்கடம் வருகிறது. அப்படி வருகிறவர்களை எதிர்த்து அவர்கள் அங்கே வராத அளவுக்கு இருக்கிறவர்கள் தடுக்கிறார்கள் என்ற நிகழ்ச்சி நடக்கிறது. அதன் காரணமாக சங்கடம் ஏற்பட்டிருக்கிறதாகக் குறிப்பிட்டார்கள். அதற்கு வழி கண்டுபிடித்து ஒதுப்புறமாக இடம் கண்டுபிடிக்குமாறு கமிஷனர் அவர்களை கேட்கப்பட்டிருக்கிறது. ஒரு இடம் வகுக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எஸ். ராஜமார்த்தாண்டம் : திருச்சியில் பர்மா அகதிகளுக்கு ஒரு காலனி கட்டிக்கொடுக்கப்பட்டது. அதில் பர்மா அகதிகள் இருந்தார்கள். ஆனால் இப்போது அங்கே அகதிகள் இல்லாமல் காலனி பூராவும் காலியாகக் குடிசைகளாக இருக்கின்றன. அவர்கள் என்ன ஆனார்கள் ? எங்கே போனார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட வேண்டும்.

Remuneration for Supervision Work for Teachers.

*** 192.**—*Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—

(*a*) whether the teachers of the former District Board High Schools are eligible for remuneration for their supervision work at the S.S.L.C. Public Examination ; and

(*b*) if not, the reasons therefor ?

மாண்புமிகு திரு. இரா: நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Cultivation of Paddy

*** 193.** *Q.*—THIRU WILSON APOLLOS (on behalf of Thiru M. SANKARALINGAM PILLAI) : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state

(*a*) the taluk-wise acreage of single crop paddy cultivation in Kanyakumari district ; and